குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

சி. சி.216/2018

2022-ம் ஆண்டு மார்ச் 24 வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகி 4-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.மோகன்ராஜ் | வயது | : |
| த/பெ | : பழனி | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

முதல் விசாரணை .

முத்துநாயக்கன்பட்டி, எல்லாயூர் காட்டுவளவில் குடியிருக்கிறேன். கொத்து வேலை செய்கிறேன். 21.10.2017-ம் தேதி மாலை 3.00 மணியளவில் சின்னதங்கத்திற்கும் எனது தாத்தா பழனிகவுண்டருக்கும் நிலம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. எனது தாத்தாவிடம் வழி விடவேண்டும் என்று தகராறு செய்தார்கள். அப்பொழுது எனது தாத்தாவை சின்னதங்கமும், அவரது மகன் தாமரை செல்வமும் அடித்து விட்டார்கள். நெஞ்சில் குத்தி விட்டார்கள். எனது பாட்டி பழனியம்மாள் சண்டைநடந்த போது கேட்க சென்ற போது சின்னதங்கம் அவர்களின் மகன்கள் நாராயணன், கார்த்திக் ராஜா ஆகியோர் அல்லையிலும், வயிற்றிலும் கையால் அடித்து விட்டார்கள். அவர்கள் சத்தம் போடவும் அருகில் இருந்தவர்கள் வரவும் எதிரிகள் சென்று விட்டார்கள். அவர்கள் செல்லும் இன்றைக்கு தப்பித்து விட்டீர்கள் என்றைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று நால்வரும் சொல்லிவிட்டு சென்றனர். 23.10.2017-ம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் நான் கூறியுள்ளேன். சம்பவ இடத்தில் நான் இருந்தேன் என்றும், சம்பவத்தை நான் பார்த்ததாகவும் கூறியுள்ளேன். நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், அவ்வாறு தான் போலீசார் விசாரணையிலும் நான் கூறியுள்ளேன் என்றாலும், புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளுக்கு நேர்மாறாக தற்பொழுது நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்திருப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்று கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல.

இத்துடன் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மறு விசாரணை. இல்லை

ஒம்/-மோகன்ராஜ்

ஒம்/- M.A.சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC)
ஓமலூர்.